[2016 ஆகஸ்ட் 8

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 31, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன் அவர்கள், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

31—

துணை மின் நிலையம்

***869 திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அந்தியூர் தொகுதி, அத்தாணி பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அத்தாணி துணை மின் நிலையம் அமைப்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்களால் ஆணையிடப்பட்டு, 1.5 ஏக்கர் நிலம் கையகப்படுத்துவதற்கான கருத்துரு, பரிந்துரையோடு அரசுக்கு ஏற்கெனவே வந்திருக்கிறது. அந்தத் துணை மின் நிலையத்தை உடனடியாக அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களது அரசு ஆணையிட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2016 ஆகஸ்ட் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருண்டு கிடந்த தமிழகத்தை, இருளகற்றி ஒளியேற்றி, அணையா மின் விளக்காய் மின்மிகை மாநிலமாக்கி, தமிழகத்தை மிளிரச்செய்த ஒட்டுமொத்த தமிழகத்தின் ஒப்பற்றத் தாயே அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) வறண்டு கிடந்த தமிழகத்தை, தங்கள் நிருவாகத் திறமையால் வளர்ச்சி காணச்செய்த எங்கள் வாழும் தெய்வமே அம்மா! அள்ளிக் கொடுப்பதில் அன்னையாய், வாரி வழங்குவதில் வள்ளல் பெருந்தகையாய் விளங்கி, ஏழைகளின் வாழ்வில் ஏற்றங்காணச் செய்தவரே எங்கள் அம்மா!*

அந்தியூர் சட்டமன்றத் தொகுதி, அத்தாணியில் புதிய துணை மின் நிலையம் அமைக்கப்படுவதால், அந்தியூர் மற்றும் கோலூர் துணை மின் நிலையங்களிலிருந்து மின்சாரம் அளித்துவரும் உயர் அழுத்த மின் பாதைகளின் நீளம் குறைக்கப்பட்டு, அத்தாணி மற்றும் அதனைச் சுற்றி 8 கி.மீ. சுற்றளவுப் பகுதிகளிலுள்ள கிராம விவசாயிகள், பொது மக்கள் மற்றும் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு சீரான மின்சாரம் பெற்றிட இதுவொரு நிரந்தரத் தீர்வாக அமைந்துவிடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் சட்டமன்றத் தொகுதி, பர்கூர் பகுதியானது 32 குக்கிராமங்களை உள்ளடக்கிய, பரப்பளவு அதிகம் கொண்ட மலைவாழ் மக்கள் வாழும் மலைப் பகுதியாகும். இங்குள்ள பகுதிகளுக்கு மின் விநியோகம் மற்றும் பராமரிப்புப் பணிகள் செய்வதற்காக அந்தியூர் வடக்குப் பிரிவு அலுவலகத்திலிருந்து சுமார் 40 முதல் 50 கி.மீ. வரை செல்ல வேண்டியுள்ளது. பழுது ஏற்படும்பொழுது, பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள பணியாளர்கள் கீழேயிருந்து மலைப் பகுதிக்குச் செல்வதற்குக் காலதாமதம் ஏற்படுவதாலும், மலைப் பகுதி மக்கள் கீழேயுள்ள அலுவலகத்திற்கு வருவதற்கு சிரமப்படுவதாலும், மலைவாழ் மக்கள் மற்றும் பணியாளர்களின் பணமும், நேரமும் விரயமாவதைத் தவிர்க்கவும், மலைவாழ் மக்களுக்கு விரைவான சேவை கிடைத்திடவும் பர்கூர் மலைப் பகுதியிலேயே ஒரு பிரிவு அலுவலகம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் துணை மின் நிலையம் அமைப்பது குறித்து கேள்வி கேட்டார்கள். இப்போது பர்கூர் பகுதியில் ஒரு யூனிட் அலுவலகம் வேண்டுமென்று கேட்டிருக்கின்றார். அந்த மலைப் பகுதியில் அதிகப்படியான மக்கள் வசிக்கின்றார்கள்; ஏதாவது மின் தடை ஏற்பட்டுவிட்டால், கீழிருந்து மேலே செல்வதற்குக் கஷ்டமாக இருக்கிறது; எனவே, அங்கு ஒரு யூனிட் அலுவலகம் அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றார். இந்தக் கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10—05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஒப்புதலோடு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்திருக்கக்கூடிய பதில் திருப்திகரமாக அமைந்துள்ளது. மக்கள் மென்மேலும் பயனடைய இது ஒரு முக்கிய மைல் கல்லாக அமையும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி அவர்கள்.*

திரு. அ. நல்லதம்பி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில் புதூர்நாடு மலைப் பகுதி விவசாயிகளும், மலைவாழ் மக்களும் நிறைந்த பகுதி. அந்தப் பகுதியில் சீரான மின்சாரம் கிடைத்திட, அரசின் நிலுவையிலுள்ள, வேலூர் கிராமத்தில் 33/11* K.V. *துணை மின் நிலையம் அமைக்கும் பணியினை அரசு ஆவன செய்து நிறைவேற்றுமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

2016 ஆகஸ்ட் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்தில் ஏற்கெனவே 70 துணை மின் நிலையங்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வெட்டுத் தீர்மானத்தில்கூட இதைக் கேட்டிருந்தார்கள். அவர் சொல்கின்ற அளவிற்கு அங்கே மின் பளு இல்லாத காரணத்தினால், இப்பொழுது அதைக் கொடுப்பதற்கு வாய்ப்பில்லை. எதிர்காலத்திலே மின் பளு அதிகரிப்பின், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.

திரு. இரா. குமரகுரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதம் தொட்டு வணங்குகிறேன். எனது உளுந்தூர்பேட்டை தொகுதி, அதிக விவசாயிகள் நிறைந்த பகுதியாக இருக்கின்றது. அங்குள்ள எலவனாசூர்கோட்டை பகுதியைச் சுற்றி 20 கிராமங்கள் இருக்கின்றன. எலவனாசூர்கோட்டை பகுதியிலே ஒரு துணை மின் நிலையம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன். அதேபோல, காட்டுசெல்லூர் பகுதியிலே அதிக விவசாயிகள் இருக்கின்ற காரணத்தால், காட்டுசெல்லூர் பகுதியை மையமாக வைத்து ஒரு துணை மின் நிலையமும், சேந்தநாடு பகுதியிலே ஒரு துணை மின் நிலையமும் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டத்தில் 43 துணை மின் நிலையங்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

சொன்ன பகுதியில் மின் பளுவை ஆராய்ந்து, எந்த அளவிற்கு மின் தேவை இருக்கின்றது என்பதைப் பொறுத்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன் அவர்கள்.*

திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குடி தொகுதிக்குட்பட்ட பகுதியானது முழுக்க முழுக்க விவசாயம் நிறைந்த பகுதியாகும். புதுக்கோட்டை செயற்பொறியாளர் அலுவலகம் அறந்தாங்கியில் அமைக்கப்பட்டுள்ளது. அறந்தாங்கி கோட்டத்தில் மொத்தம் 5 உப கோட்டங்களும், 34 உதவி மின் பொறியாளர் அலுவலகங்களும் உள்ளன. தமிழ்நாட்டிலேயே மிகப் பெரிய கோட்டமாகவும் செயல்பட்டு வருகின்றது. இதில் ஆலங்குடியில் 2 உப கோட்டங்களும், 19 பிரிவு அலுவலகங்களும் உள்ளன. அதனால் பராமரிப்பது மற்றும் பொது மக்கள் குறைகளைத் தீர்ப்பது மிகவும் கடினமாக உள்ளது. மேட்டுப்பட்டியிலிருந்து, ஆவணம்கைகாட்டி வரையிலும், கோட்டப்பட்டணம் மீமிசல் முதல் தஞ்சாவூர் அருகிலுள்ள ரகுநாதபுரம் வரையிலும் இதனுடைய ஏரியா பரந்து விரிந்துள்ளது. ஆலங்குடியில் இரண்டு உப கோட்டங்கள் உள்ள பகுதியில் 4 துணை மின் நிலையங்கள் உள்ளன. ஆலங்குடி பகுதியில் 53,500 வீட்டு மின் இணைப்புகளும், 9 ஆயிரம் வணிக மின் இணைப்புகளும், 700 தொழில் மின் இணைப்புகளும் உள்ளன. அதிகமான மக்கள் பயன்பெறக்கூடிய பகுதி. எனவே, ஆலங்குடி பகுதியில் மின் வாரிய செயற்பொறியாளர் அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் வெட்டுத் தீர்மானத்திலே இந்தக் கேள்வியைக் கேட்டிருந்தார்கள்.*

2016 ஆகஸ்ட் 8]

அதற்குண்டான பதிலை அவருக்கு ஏற்கெனவே அனுப்பியிருக்கின்றோம்.

மாண்புமிகு உறுப்பினர் செயற்பொறியாளர் அலுவலகம் வேண்டும் என்று கேட்டிருக்கின்றார். மேலும், அந்தப் பகுதியிலே விவசாயிகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், மும்முனை மின்சாரம் குறைவாக இருப்பதை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கின்றார். மாண்புமிகு அம்மா அவர்களின் அரசைப் பொறுத்தவரையில், சீரான மின்சாரத்தை தடையில்லாமல் கொடுக்க வேண்டுமென்றுதான் ஆணையிட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து, பிரிப்பதற்கு அரசினுடைய விதிமுறைகளின்படி இருந்தால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, சட்டத்திற்குட்பட்டு, நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.

முற்பகல் 10—10

திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது மேட்டுப்பாளையம் தொகுதிக்குட்பட்ட பில்லூர் அணைக்கட்டிலிருந்துதான் கோவை, திருப்பூர் ஆகிய மாவட்டங்களுக்குக் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இந்தக் குடிநீருக்குண்டான மின்சாரம் தற்போது நிலப்பரப்பிலுள்ள மருதூர் 110/11 K.V. துணை மின் நிலையத்திலிருந்து சுமார் 25 கிலோ மீட்டர் தொலைதூரத்திலுள்ள பில்லூர் அணைக்குக் கொண்டு செல்லப்படுகிறது. தற்போது மின்சாரம் கொண்டு செல்கின்ற பாதை ஏறத்தாழ 10 கிலோ மீட்டருக்கு மேலாக மலைப் பகுதியிலே அமைந்திருக்கிறது. மிகவும் அடர்த்தியான மலைப் பகுதியாக இருக்கின்ற காரணத்தினாலும், தற்சமயம் வன விலங்குகளின் நடமாட்டம் அங்கே அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலும், மின் தடை ஏற்படுகின்ற காலங்களில், அதனைச் சீர்செய்வதற்கு மின் பணியாளர்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அதேபோல, பராமரிப்பு செய்கிற காலங்களிலும் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. எனவே, மருதூர் பகுதியில் இருக்கின்ற

மின் நிலையத்தைப் பிரித்து, பில்லூர் பகுதியில் 230/22 KV துணை மின் நிலையத்தை அமைத்துக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தட வசதி சரியில்லாத காரணத்தினால், மின் தடை ஏற்படுகின்றபோது, உடனடியாக அந்த மின் தடையை சரிசெய்ய முடியாமல் இருக்கின்றது என்று முதலில் சொன்னார். இப்பொழுது 230 K.V. துணை மின் நிலையம் வேண்டுமென்றும் கேட்டிருக்கின்றார். 230 K.V. துணை மின் நிலையம் அமைப்பதற்கு அங்கு எந்த அளவுக்கு மின் தேவை இருக்கின்றது; எந்த அளவுக்கு மின் கடத்திகள் இருக்கின்றன என்பது ஆய்வு செய்யப்படும். தேவையான அளவிற்கு feeder இப்போது இருக்கிறது. இருந்தாலும் எதிர்காலத்தில் தேவை இருப்பின், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை, மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஏற்கெனவே அவர் தட வசதியைப்பற்றிக் கேட்டார். தட வசதி அவர்கள் சொல்வதுபோல சரியாக இல்லாமல் இருந்தால், பாதை வசதி சரியாக இல்லாமல் இருந்தால், அதை சீர்செய்து கொடுப்பதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு திரு. அ. சௌந்தரபாண்டியன் அவர்கள்.

திரு. அ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லால்குடி தொகுதியில் கல்லகம், கீழ அரசூர், மேல அரசூர், ஓரத்தூர், சாத்தப்பாடி, சிலுவைப்பட்டி, கண்ணனூர் போன்ற பகுதிகளில் விவசாயிகள் தங்களுடைய தேவைக்கான தண்ணீரை 500, 600 அடிக்குக்கீழ், மின் மோட்டார்களை இயக்கிப் பெற வேண்டிய சூழ்நிலை உள்ளது. அதுபோன்ற சூழ்நிலையில், சரியான மின் திறன் கிடைக்காத காரணத்தினால், விவசாயிகளுடைய மின் மோட்டார்களில் உள்ள Coil தொடர்ந்து

2016 ஆகஸ்ட் 8]

எரிந்துவிடக் கூடிய நிலை இருக்கிறது. அவற்றை நிவர்த்தி செய்கின்ற வகையில், மத்திய அரசு எப்படி அனைத்துப் பேரூராட்சிகளிலும் துணை மின் நிலையம் அமைக்கின்றதோ, அதுபோன்று, சிறப்புக் கவனம் செலுத்தி கல்லகத்தில் ஒரு துணை மின் நிலையம் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதலில்* transformer-*ல்* load *குறைவாக இருக்கின்ற காரணத்தினால், மின் மோட்டார்கள் பழுதடைகின்றன என்று சொன்னார்கள். பேசி முடிக்கின்றபோது துணை மின் நிலையம் வேண்டுமென்று கேட்கின்றார். எந்தப் பகுதியில் மின் மாற்றிகள் தேவையோ, 70 சதவிகிதத்திற்கு மேல் மின்பளு இருக்கும்பட்சத்தில், அதை உடனடியாக மாற்றிக் கொடுக்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, அந்த* transformer-*ல் பழுது இருந்தால்,* load *அதிகமாக இருந்தால், அதை உடனடியாக மாற்றிக் கொடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும். அதேபோல, அவர் இறுதியாகச் சொல்கின்றபோது, துணை மின் நிலையம் வேண்டுமென்று கேட்டிருக்கின்றார். மாண்புமிகு உறுப்பினர்* transformer *கேட்கிறாரா அல்லது துணை மின் நிலையம் கேட்கிறாரா என்பதை ஆராய்ந்து, மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள்.*

திரு. எச். வசந்தகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதி என்பது ** மூலக்கரைப்பட்டி, காந்திநகர். . .*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் குற்றச்சாட்டு மாதிரி சொல்லக்கூடாது. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நீங்கள் கேள்வி கேளுங்கள். (குறுக்கீடு) அப்படி குற்றச்சாட்டு எல்லாம் சொல்லக்கூடாது. கேள்வி கேளுங்கள். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.*

திரு. எச். வசந்தகுமார்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அப்படியெல்லாம் சொல்லக்கூடாது. (குறுக்கீடு) ஆதாரமில்லாமல் அப்படியெல்லாம் சொல்லக்கூடாது.*

திரு. எச். வசந்தகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கரைப்பட்டி, காந்திநகர் காலனியில் அடிமட்ட மக்கள் வாழ்கின்ற அந்த இடத்தில், மின்சாரம் அதிக நேரம் தடைபடுகின்றது; மின்சாரம் சரியாக வராமல் இருக்கிறது. அதற்கு உயர் அழுத்த மின் மாற்றி அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதை தங்கள் மூலமாகக் கேட்டு அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10—15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்தடை என்பது வேறு; மின்வெட்டு என்பது வேறு என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதலில் புரிந்துகொள்ள வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், குறிப்பிட்ட கிராமத்தில் மின்சாரம் தடை ஏற்படுகிறது; அங்கு மின் பளு அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் மின்தடை ஏற்படுகிறது என்று சொல்கிறார்கள். அவர் குறிப்பிடும் கிராமத்தில் மின் பளு அதிகமாக இருக்கும்பட்சத்தில், ஏற்கெனவே பேசிய மாண்புமிகு உறுப்பினருக்குச் சொன்னதைப்போல,* transformer *தேவையாக இருந்தால், அதுகுறித்து மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும். எந்தப் பகுதியிலாவது மின் பளு 70 சதவீதத்திற்கும் அதிகமாக இருந்தால், அந்தப் பகுதியிலுள்ள மின்மாற்றியை மாற்ற வேண்டும் என்று ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்கள்*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2016 ஆகஸ்ட் 8]

ஆணையிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்ற அந்தக் குக்கிராமத்தில் உள்ள மின்மாற்றியில் மின் பளு அதிகமாக இருக்குமேயானால், அதுபற்றி ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 32, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

32—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

***1704—திருமதி எஸ். விஜயதரணி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், இடைக்கோடு பேரூராட்சி, மூவோட்டுக்கோணம் மற்றும் மேல்பாலை பகுதிகளில் ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், இடைக்கோடு பேரூராட்சியில் உள்ள மூவோட்டுக்கோணம் மற்றும் மேல்பாலை பகுதிகளில் வாழும் மக்களுக்கு, தலா 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளின்மூலம் போதுமான அளவில் குடிநீர் வழங்கப்பட்டுவருவதால், மேற்கூறிய இடங்களில் புதியதாக 1 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்குத் தேவை எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.